**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக நடத்தப்படும் இரண்டு பகல் நேர காப்பகங்கள்– 2016–17 ஆம் நிதியாண்டிற்கான திட்டத் தொடராணை மற்றும் ரூ.7,76,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல்– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.71

நாள்: 19–10–2016
துன்முகி, ஐப்பசி 3,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:–

1. அரசாணை(நிலை) எண்.56, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 08–12–2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2646/மா.தி.ந.2.1/2016, நாள் 14.07.2016.

--------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக செயல்பட்டு வரும் சர்வோதீப் நிறுவனம், பெரியகுளம்; சேவா நிலையம், ஆண்டிப்பட்டி மற்றும் இமேஜ் பொதுநல அறக்கட்டளை, சின்னமனூர் ஆகிய மூன்று பகல் நேர காப்பகங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தினை, 2015–2016 ஆம் நிதியாண்டில் தொடர திட்டத் தொடராணையும், மற்றும் ஒரு மையத்திற்கு ரூ.3,88,000/– வீதம் மூன்று பகல் நேர காப்பகங்களுக்கு மொத்தம் ரூ.11,64,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக செயல்பட்டு வரும் அன்னை டோரா மனவளர்ச்சி குன்றியோருக்கான காப்பகத்தினை நடத்தி வரும் சேவா நிலையயம சொசைட்டி, ஆண்டிப்பட்டி என்ற தொண்டு நிறுவனம் இத்திட்டத்திலிருந்து 31.12.2015 அன்று விடுவிக்கப்பட்டு, மேற்படி காப்பகத்தினை ரமணா மருத்துவ அறக்கட்டளை மூலம் 01.01.2016 முதல் நடத்தி வருவதாகவும், அதற்கான அனுமதி அரசிடம் கோரப்பட்டுள்ளதாகவும், எனவே (1) ரமணா மருத்துவ அறக்கட்டளை, ஆண்டிபட்டி (2) சர்வதீப் நிறுவனம், பெரியகுளம், மற்றும் (3) இமேஜ் பொதுநல அறக்கட்டளை, டி. மேட்டுப்பட்டி, உத்தமபாளையம் ஆகிய மூன்று பகல் நேர காப்பகங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தினை 2016–2017 ஆம் நிதியாண்டில் தொடர திட்டத் தொடராணையும் மற்றும் ஒரு மையத்திற்கு தலா ரூ.3,88,000/– வீதம் மூன்று பகல் நேர காப்பகங்களுக்கு மொத்தம் ரூ.11,64,000/– கீழ்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(த.பி.பா)

| வ.எண். | | விவரம் | தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| அ. | பணியாளர் | | | |
| | 1. | சிறப்பு கல்வி பயிற்றுநர்/ Occupational Therapist/Physio Therapist ரூ.10,000/– x 2 x 12 மாதங்கள் | ரூ.2,40,000/– | ரூ.2,64,000/– |
| | 2. | Care giver / Nursing trained ஆயா ரூ.1,000/– x 1 x 12 மாதங்கள் | ரூ.12,000/– | |
| | 3. | துப்புரவுப் பணியாளர் ரூ.1,000/– x 1 x 12 மாதங்கள் | ரூ.12,000/– | |
| ஆ. | இதர செலவினங்கள் | | | |
| | 1. | உணவு ரூ.10/– x 25 நாட்கள் x 12 மாதங்கள் x 30 குழந்தைகள் | ரூ.90,000/– | ரூ.1,24,000/– |
| | 2. | மருந்துகள் | ரூ.3,000/– | |
| | 3. | எழுதுப் பொருள்கள் | ரூ.3,000/– | |
| | 4. | வாடகை | ரூ.24,000/– | |
| | 5. | நிர்வாகச் செலவு | ரூ.4,000/– | |
| | | **மொத்தம்** | | **ரூ.3,88,000/–** |
| ரூ.3,88,000/– x 3 மையங்கள்= ரூ.11,64,000/– | | | | |

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக ஏற்கனவே செயல்பட்டு வரும் சர்வோதீப் நிறுவனம், பெரியகுளம் மற்றும் இமேஜ் பொதுநல அறக்கட்டளை, உத்தமபாளையம் ஆகிய இரண்டு பகல் நேர காப்பகங்களுக்கு மட்டும் நிதியுதவி வழங்கும் திட்டத்தினை, 2016–2017 ஆம் நிதியாண்டில் தொடர திட்டத் தொடராணையும், மற்றும் ஒரு மையத்திற்கு இணைப்பில் உள்ளவாறு ரூ.3,88,000/– வீதம் இரண்டு பகல் நேர காப்பகங்களுக்கு மொத்தம் ரூ.7,76,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்து ஆறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் அரசு மானிய உதவிக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படியும், அரசு மானியம் காலாண்டு அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பயனீட்டுச் சான்றிதழ் பெற்ற பின்னரே அடுத்த காலாண்டிற்கான மானியம் விடுவிக்கப்பட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

5. பத்தி–3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

> “2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் –02. சமூக நலன் –101– மாற்றுத் திறனாளிளிகள் நலன் – I. திட்டத்தில் சேராதது – CZ தேனி மாவட்டத்தில் அரசு சாரா அமைப்புகள் மூலம் மனநலம் குன்றிய குழந்தைகளுக்காக 2 பகல் நேர பராமரிப்பு மையங்களைத் தொடங்குவதற்கு நிதியுதவி – 09 உதவித் தொகை –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (த.தொ.கு.2235–02–101–CZ–0934)”

**6.** இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.54951/நிதி(சந)/2016, நாள்17.10.2016–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
**நகல்:**
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம்.
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், தேனி மாவட்டம்.
நிதி (சந)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**<u>இணைப்பு</u>**

(அரசாணை(1D) எண்.71, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 19–10–2016)

| **வ.எண்.** | | **விவரம்** | **தொகை (ரூ.)** | **மொத்தம் (ரூ.)** |
|---|---|---|---|---|
| அ. | பணியாளர் | | | ரூ.2,64,000/– |
| | 1. | சிறப்பு கல்வி பயிற்றுநர்/Occupational Therapist/Physio Therapist ரூ.10,000/– x 2 x 12 மாதம் | ரூ.2,40,000/– | |
| | 2. | Care giver/Nursing trained. ஆயா ரூ.1,000/– x 1 x 12 மாதம் | ரூ.12,000/– | |
| | 3. | துப்புரவுப் பணியாளர் ரூ.1,000/– x 1 x 12 மாதம் | ரூ.12,000/– | |
| ஆ. | இதர செலவினங்கள் | | | ரூ.1,24,000/– |
| | 1. | உணவு ரூ.10/– x 25 நாள் x 12 மாதம் x 30 குழந்தைகள் | ரூ.90,000/– | |
| | 2. | மருந்துகள் | ரூ.3,000/– | |
| | 3. | எழுதுப் பொருள்கள் | ரூ.3,000/– | |
| | 4. | வாடகை | ரூ.24,000/– | |
| | 5. | நிர்வாகச் செலவு | ரூ.4,000/– | |
| **மொத்தம்** | | | | **ரூ.3,88,000/–** |

2 மையங்கள் x ரூ.3,88,000/– = ரூ.7,76,000/–
(ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்து ஆறாயிரம் மட்டும்)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.